நிற்பது, குனிவது, உட்காருவது, நெற்றியை தரையில் வைப்பது - இவைகள்தான் தொழுகையில் உடலால் செய்யப்படுவபவை.

### ஏன் அரபு மொழியில் வணங்குகிறார்கள்?

### எங்கும் ஒரே மொழியில் தொழுகை

குர்ஆனின் மொழி அரபு மொழி. அதன் வசனங்களைக் கொண்டு தொழுவார்கள். அதனால் ஒரு முஸ்லிம், உலகில் எந்த பள்ளிவாசலிலும் இறைவனை வணங்கலாம்.

தொழுகையில் ஓதப்படும் சொற்களின் வசனங்களின் அர்த்தத்தை அறிந்து தொழ வேண்டும்.

**தொழுகை முடிந்ததும் தனது தனிபட்ட வேண்டுதலை இறைவனிடம் எந்த மொழியிலும் கேட்கலாம்.**

வெள்ளிக்கிழமை பகல் தொழுகையை தனிமையாகத் தொழக்கூடாது. கூட்டாக (ஜமாத்தாக) தொழ வேண்டும்.

**ஒரு முஸ்லிமின் முழு வாழ்க்கையும் இறைவணக்கமாக இருக்கவேண்டும்.**

உண்மை பேசவேண்டும்,
வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்,
அநீதியை எதிர்த்துப் போராட வேண்டும்.
குறிப்பிட்ட நேரங்களில் தொழவேண்டும்.

தொகுப்பு:
எ. மன்சூர் மரைக்கான்
ஆ. முஹம்மது ரியாளுதீன்
ஃபிதாவுல்லாஹ் கான்



# இஸ்லாத்தில் இறைவணக்கம்

## [Worship in Islam]

உருவமற்ற வணக்கம்
நடுவர் இல்லாத வணக்கம்
எளிமையான வணக்கம்



அளவற்ற அருளாளனும், நிகரற்ற
அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின்
திருப்பெயரால் தொடங்குகிறோம்

# இஸ்லாத்தில் இறைவணக்கம்

**படம் இல்லை, சிலை இல்லை,
அடையாளச்சின்னம் இல்லை,
முஸலிம்கள் எதை வணங்குகிறார்கள்?**

## இறைவன் ஒருவன்

இதுதான் முஸ்லிம்களின் அடிப்படை நம்பிக்கை.

இறைவன் உருவமற்றவன்.
மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டவன்.

அவனுக்கு மனைவிகள், பிள்ளைகள்,
துணைவர்கள் இல்லை, அவன்
யாராலும் பெறப்படவுமில்லை.

அவன் யாருடைய சந்ததியும் இல்லை.
அவனுக்கு யாரும் சந்ததி இல்லை. மேலும்
அவனுக்கு நிகரானவர் யாரும் இல்லை.

எல்லாமே அவனால் படைக்கப்பட்டது.
படைப்பது அவனுக்கு எளிது. அவன்
"ஆகுக" என்றால் போதும், அது உடனே
ஆகிவிடும், உயிர்பெற்றுவிடும்.

ஆயுள் காலங்கள் நிர்ணயிப்பதும் அவனே.
காலங்கள் முடிந்ததும் அவனிடமே
அனைத்தும் மீண்டும் திரும்பிவிடும்.

**மலர்கள் இல்லை, ஊதுவர்த்தி இல்லை,
வாசனைக்கட்டை புகை இல்லை, முஸலிம்கள்
வணக்கத்திற்கு எதை பயன்படுத்துகிறார்கள்?**

### சுற்றுச்சுழலை பாதுகாக்கும்,
### படையல் இல்லாத வணக்கம்

இஸ்லாமிய வணக்கம் எளிமையானது,
சுத்தமானது. எதையும் எரிப்பதில்லை.
எதையும் கொளுத்துவதுமில்லை.

இறைவனுக்குப் படையல் வைப்பதில்லை.
இறைவன் தேவையற்றவன்.

**இங்கு அர்ச்சகர்கள் இல்லை, அப்படியெனில்
முஸ்லிம்களின் வணக்கத்திற்கு யார் வழிகாட்டி?**

### நடுவர் இல்லாத இறைவணக்கம்

முன் நின்று தொழுகை நடத்துபவரை
'இமாம்' என்று கூறுவர்.

இஸ்லாத்தைப் பற்றிய அறிவும், குர்ஆனை
முறையாக ஓதும் ஆற்றலும், வெள்ளிக்கிழமை
பகல் தொழுகையில் பிரசங்கம் செய்யும் திறமையும்
உள்ளவரை இமாமாக நியமிக்கவேண்டும்.

இமாம் இறைவனுக்கும் மனிதனுக்கும்
இடையில் உள்ள தரகரோ, நடுவரோ அல்ல.

முஸ்லிம்கள் தம் தேவைகளை இறைவனிடம்
நேரிடையாகவே கேட்கவேண்டும்.

**இங்கு 'புனித' நீர் இல்லை,
மயில் இறகு இல்லை,
முஸ்லிம்கள் எதைக் கொண்டு
ஆசிர்வதிக்கப்படுகிறார்கள்?**

### எளிமையான வணக்க முறை

இஸ்லாமிய இறைவழிபாட்டிற்கு முன்
உடல் சுத்தம் இன்றியமையாதது. குறிப்பிட்ட உடல்
பகுதிகளை முறையோடு கழுவி தொழுகை புரியும்
இடத்தில் அனைவரும் வரிசையில் நிற்பர்.
யார் முதலில் வருகிறாரோ அவர்
முன் வரிசையில் நிற்பார்.

தொழும் இடத்தில் அனைவரும் சமம்.